## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் **154(3)** ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன

நம்பிக்கை பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் மீது எனது அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயாயத்தை மறுப்பதற்கான அடிப்படை பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

## 1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கை பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் நம்பிக்கை பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிகைகை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நம்பிக்கை பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நம்பிக்கை பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நம்பிக்கை பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நம்பிக்கை பொறுப்பின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நம்பிக்கை பொறுப்பு தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும்

பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கை பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கை பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் 2 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கப்பெறவில்லை | நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நியமம் 3 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் ஒத்த கொடுக்கல்வாங்கல் தொடர்பாக பின்பற்றப்படும் முறை நெருக்கமாக வைக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும், முன்னைய ஆண்டின் மொத்த முதலீட்டு வட்டி கணக்கிடப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டில் ரூபா 22,450,979 ஆன நிகர முதலீட்டு வட்டி வருமானம் கணக்கிடப்பட்டிருந்தமையினால் ரூபா 1,181,630 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட வரி செலவு **(With Holding Tax)** கணக்குகளில் விடப்பட்டிருந்தது. | பதில் கிடைக்கப்பெறவில்லை | நியமத்தின் பிரகாரம் ஒத்த கொடுக்கல் வாங்கலுக்காக கணக்கீட்டு கொள்கையில் கூறப்படும் விதத்தில் கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | நியமம் 07 இன் 57 ஆம் பந்திக்கு முரணாக மொத்தக் கிரயமான ரூபா 38,598,438 ஆன சுத்திகரிப்பு இயந்திரக்கூடத்தின் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக அடையாளப்படுத்தப்படாமல் 5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | பதில் கிடைக்கப்பெறவில்லை. | நியமத்தின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் வெவ்வேறாக அடையாளப்படுத்தப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் இன்னுமாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 2,147,120 ஆன 2 நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருப்பினும் அச் சொத்து மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கப்பெறவில்லை. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு செய்யப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் முழுமையாக பெறுானத்தேய்வு செய்யப்பட்டிருந்த கொள்வனவு விலை ரூபா 365,000 ஆன முச்சக்கர வண்டி ரூபா 205,000 இற்கு விற்பனை செய்யப்பட்ட, விற்பனையினால் பெறப்பட்ட பணம் நிலையான சொத்து விற்பனையினால் பெறப்பட்ட பணமாக கணக்கிடப்படாது நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான குறைப்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 6,000,000 ஆன நிலையான சொத்திற்காக முன்னைய ஆண்டில் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 48,798 முன்னைய ஆண்டுடன் இணக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 50,000 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய வருடாந்த வட்டி வருமானத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக அடையாளப்படுத்தப் பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | பொதுமக்கள் அழைப்பு அமைப்பிற்காக அம்பியர் உபகரணமொன்று **(Amplifier)** கொள்வனவு செய்யப்படுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 559,498 ஆன தொகை மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக கூடுதல் கட்டண செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2020 இன் கணக்கு தயாரிக்கப்படுகையில் கணக்கீட்டு குறைப்பாடுகள் சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மூலதன செலவாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | கணக்கீட்டு அமைப்பு **(Accounting System)** கொள்வனவு பெறுமதியான ரூபா 45,000 ஆன மூலதன செலவு மற்றும் மிகைச் செலவாக இரண்டு முறை கணக்கிடப்பட்டிருந்தது. | 2020 இன் கணக்கு தயாரிக்கப்படுகையில் கணக்கீட்டு குறைப்பாடுகள் சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டணம் ஒதுக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கப்பெறவில்லை. | மதிப்பிடப்பட கூடிய செலவுகளுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| 6 பேரேட்டுக் கணக்குகள் | **409,466,461** | **336,453,900** | **73,012,561** | பதில் கிடைக்கப்பெறவில்லை | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்படல் வேண்டும். |
| 8 பேரேட்டுக் கணக்குகள் | **1,381,295,739** | **1,383,861** | **85,912,474** | பதில் கிடைக்கப்பெறவில்லை. | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்படல் வேண்டும். |
| 6 பேரேட்டுக் கணக்குகள் | **0** | **176,618,286** | **176,618,286** | பதில் கிடைக்கப்பெறவில்லை. | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்படல் வேண்டும். |
| 3 பேரேட்டுக் கணக்குகள் | **0** | **2,268,198** | **2,268,198** | பதில் கிடைக்கப்பெறவில்லை. | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பாதுகாப்புச் சேவை செலவு | **2,676,110** | 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் | பதில் கிடைக்கப்பெறவில்லை. | நிதிப் பிரமாணம் 272(3) இன் பிரகாரம் அனைத்து கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சில்லறைக் காசு கொடுப்பனவு | **696,466** | பட்டியல்கள் | பதில் கிடைக்கப்பெறவில்லை. | சில்லறைக் காசினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுடன் தொடர்புயை பட்டியல்கள் உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | கட்டிடங்கள் | **1,235,359,985** | கட்டிடங்களை அடையாளப்படுத்துவதற்குரிய தகவல்கள் | பதில் கிடைக்கப்பெறவில்லை. | நிலையான சொத்துக்கள் வெவ்வேறாக அடையாளப்படுத்தக் கூடிய முறையில் தகவல்கள் பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஈ) | தற்காலிகமாக நிறுத்தப்பட்ட மீள் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் | **5,550,000** | மீதி உறுதிப்படுத்தல்கள் | பதில் கிடைக்கப்பெறவில்லை. | மீதிகள் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | காசு மற்றும் காசுக்கு சமனானவை | **8,982,954** | வங்கி கணக்கிக்க கூற்று | பதில் கிடைக்கப்பெறவில்லை. | காசுப் புத்தகம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் காசு மற்றும் காசுக்கு சமனானவை மற்றும் வங்கி மீதி இணக்கம் செய்யப்படுவதற்கு வங்கி கணக்கிணக்க கூற்றொன்று தயாரிக்கப்படல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வேண்டும். |
| (ஊ) | நிதிக் கூற்றுக்களின் இணக்கம் | **1,629,047** | முறையாக தயரிக்கப்பட்ட நாட்குறிப்புக்கள் | பதில் கிடைக்கப்பெறவில்லை. | முறைாயக ஜர்னல் குறிப்புக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் II ஆம் அதிகாரத்தின் 13.7 ஆம் உறுப்புரை மற்றும் 2016 யூன் 20 ஆம் திகதிய **DMS/1831** இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நம்பிக்கை பொறுப்பிற்காக பணிநிலையினர் அங்கீகரிக்கப்பட்டு 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும் நம்பிக்கை பொறுப்பின் கணக்காளர் பதவி வெற்றிடத்திற்காக இணைத்தல் மேற்கொள்ளப்பட்டிராததுடன் நம்பிக்கை பொறுப்பின் சபை தீர்மாணத்தின் மீது 2016 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சின் பிரதான கணக்காளர் நம்பிக்கை பொறுப்பின் கணக்காளர் பதவியில் பதிற் கடமை மேற்கொண்டமைக்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 303,000 செலுத்தப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின் II ஆம் அதிகாரத்தின் 13.7 ஆம் உறுப்புரையின் பிகாரம் வெற்றிடமான பதவியொன்றின் கடமை நிறைவேற்றுதலுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் அக் கடமை நடவடிக்கைகள் நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தருக்கு மேலதிக கொடுப்பனவு செலுத்துவதற்கு முடியாது என காட்டப்பட்டுள்ளது. எனினும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் வெற்றிடம் நிரப்பப்படாததினால் சரியாக நிதிக்கூற்றுக்கள் | கடற்றொழில் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தலினூடாக தொடர்படைய சேவையை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு முடிந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு முறையான முறையில் பேணிச் செல்வதற்கு தேவையான வெற்றிடமான பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் இணைத்தல் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்விற்கு முன்வைக்க முடியாது காணப்பட்டது. | | |
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் **264** | அனைத்து கொடுப்பனவு பற்றுச்சீட்டுகளும் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த பணம் பெறப்பட்டமைக்கு பெறுநரிடமிருந்து பெறப்பட்ட ரீசித்தினால் உறுதிசெய்ய வேண்டியிருப்பினும் ரூபா 1,918,763 ஆன கொடுப்பனவு தொடர்பான உறுதிச்சீட்டு பெறப்பட்டமைக்கான சான்று காணப்படவில்லை. | இந்த கொடுப்பனவு தொடர்பாக பெறுநரிடமிருந்து உறுதிச்சீட்டு பெறப்படாததுடன் தொடர்புடைய பணம் பெறப்பட்டமைக்கு கைத்சாத்திடல் பதிவேடு நிர்வாக அலுவலகத்தில் பேணிச்செல்லப்படு கின்றமை தெரிவிக்கப்பட்டுள்ளது. | மொத்த பணம் கிடைத்தமைக்கு பெறுநரிடமிருந்து பெறப்பட்ட சான்று உறுதிச்சீட்டில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைச்சேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைக்கப்பெறவில்லை. | நிலையான சொத்துக்கள் வெவ்வேறாக அடையாளப்படு த்தக் கூடிய விதத்தில் பதிவேடொன்று பேணிச் செல்லல் வேண்டும். |
| **(ஈ)** | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய **PF/423** இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.3 (ஆ) பந்தி | சட்டரீதியானதல்லாத ஏதேனும் நிதியம் இன்னுமாக பேணிச் செல்வதற்கு சாதாரண காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்ற சட்டமொன்றினூடாக சட்டரீதியாக்குவதற்கு முடியுமான வகையில் தொடர்புடைய காரணங்கள் கூறப்பட்டு பொது நிதி திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டியிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்து முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு தெரிவித்து எஞ்சிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொது நிதிச் சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட்டு சட்டரீதியாக்கப்ப டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2013 இன் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் 10 ஆம் உறுப்புரை | மீளாய்வாண்டின் ரூபா 99 மில்லியன் ஆன குத்தகை வாடகை வருமானமொன்று நம்பிக்கை பொறுப்பு ஈட்டியிருப்பினும் பெறுமதி சேர் வரியின் மீது குத்தகை கொடுப்பனவிற்காக பதிவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு தெரியப்படுத்தி எஞ்சிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரி மீதான கொடுப்பனவிற்காக பதிவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்பின் உடன்படிக்கை | | | |
| | (i) 6(அ) 1 ஆம் பந்தி | நம்பிக்கை பொறுப்பின் அனைத்து மிகை பணம் திறைச்சேரி உண்டியல்களில் அரச பிணைப்பத்திரங்களில் தவிர்த்து வேறு வழியில் முதலிடுவதற்கு திறைச்சேரியின் முன் எடுத்துமூல இணக்கப்பாடு பெறப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறான இணக்கப்பாடு இல்லாது நம்பிக்கை பொறுப்பு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மட்டும் 2019 ஆம் ஆண்டினுள் இரு அரச வங்கிகளில் ரூபா 245 மில்லியனிற்கு அதிகமான பணம் முதலிடப்பட்டிருந்தது. | இந்த நிலையான வைப்பு ஆரம்பித்துள்ளது நம்பிக்கை பொறுப்பு உடன்படிக்கையின் 7 (ஐ) மற்றும் 9(ஆ) ஆம் இலக்க உறுப்பரைகளின் பிரகாரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கை பொறுப்பு ஏற்படுத்தப்படும் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 6(அ)1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (i) 6 (அ) II ஆம் பந்தி | பொறுப்பாளர்களின் சாதாரண அதிகாரத்தின் கீழ் செயற்பாட்டு/ பராமரிப்பு செலவுகளுக்கு தொடர்புடைய செலவுகள் தவிர மற்றைய செலவு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் செயலாளரின் எழுத்துமூல அங்கீகாரத்துடன் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் நம்பிக்கை பொறுப்பின் அப்போது இருந்த உதவிப் பணிப்பாளருக்கு 2016 ஒக்தோம்பர் தொடக்கம் 2018 யூன் வரை 20 மாதங்கள் மற்றும் 24 நாட்கள் நிலுவை போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா 282,529 ரூபா 519,354 ஆன தொகை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரம் பெறப்பட்டு இந்த கொடுப்பனவுகள் மேற்கொண்டுள்ளமை தெரிவிக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கை பொறுப்பு ஏற்படுத்தப்படும் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 6(அ)11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(iii)** | 8 (ஊ) ஆம் பந்தி | சம்பளம், கொடுப்பனவு அல்லது பரிசு பணமாக ஏதேனும் பெறுவதற்கு பொறுப்பாளர்களுக்கு உரிமை இல்லையென்று குறிப்பிட்டிருப்பினும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாது நம்பிக்கை பொறுப்பு சபைக்காக முதலாவது நபர் என பெயரிடப்பட்ட நம்பிக்கை பொறுப்பு சபையின் தலைவரான கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு 2019 சனவரி இலிருந்து திசெம்பர் வரை ரூபா 27,000 உம் ரூபா 35,000 உம் இடைப்பட்ட மொத்தம் ரூபா 323,000 ஆன தொகை மாதாந்த கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவு மேற்கொண்டிருப்பது தலைவராக மேற்கொள்கின்ற பணிகளுக்கு அல்லாதது என்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் பதவியை வகித்து மேற்பார்வை கடமையை நிறைவேற்றியமைக்காக முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கை பொறுப்பு ஏற்படுத்தப்படும் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 8 (ஊ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |
| **(ஓ)** | 2010 யூன் 03 ஆம் திகதிய அமப/**10/0958/438/001** ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்திற்கு தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு (ஆ) **(ii)** | வர்த்தக வளாகத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மற்றும் கடற்றொழில் மற்றும் மீன் வளங்கள் திணைக்களத்தின் பணி நிலையினரில் அடையாளப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மட்டும் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு இணைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும் நம்பிக்கை பொறுப்பின் பணிப்பாளர் (செயற்பாட்டு) பதவிக்காக கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் இருவர் ஊடாக கடமை நிறைவேற்றப்பட்டு இருந்ததுடன் அதற்காக 2019 ஆம் ஆண்டினுள் இரண்டு காலப்பகுதிகளுக்காக ரூபா 266,903 ஆன தொதகை செலுத்தப்பட்டிருந்தது. | பதிற் கடமை கொடுப்பனவு மீது நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக அனுபவம் மற்றும் வினைத்திறனான சேவையொன்று நிறைவேற்றுவதற்கு முடியுமாக உள்ளதுடன் குறைந்த கிரயமொன்று நிறைவேற்றுவற்கு முடியுமாக உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பின் மீது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,603,164 ஆன இலாபம் ஆக இருந்ததுடன் இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 21,507,832 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 23,110,996 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஊழியர் ஊதியம்

மற்றும் கொடுப்பனவுகள், மின்சாரப் பயன்பாடு மற்றும் பராமரிப்பு செலவு குறைந்தமையும் வர்த்தக நிலையங்கள் அளித்தல், குத்தகை கூலி வருமானம் மற்றும் நீர் கட்டணம் போன்ற வருமானங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| வருமான வழி | 2019 | 2018 | சதவீதம் | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| வர்த்தக நியையங்கள் அளித்தல் | **4,500,000** | **3,000,000** | **50%** | மீளாய்வாண்டினுள் வர்த்தக நிலையங்கள் அளித்தல்கள் அதிகரித்தமை |
| குத்தகை வாடகை வருமானம் | **99,946,000** | **93,478,900** | **7%** | சாதாரன அதிகரிப்பொன்று காணப்பட்டமை |
| வாகன நிறுத்தல் கட்டண வருமானம் | **4,085,961** | **2,772,482** | **47%** | வாகனங்கள் சுற்றாடலினுள் நிறுத்தி வைக்கப்படுகின்ற கால அளவிற்கு கட்டணம் அறவிடல் முறைமையொன்று தீர்மானித்திருந்தமையும் அதன் பிரகாரம் கணினி மென்பொருள் மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும். |
| நீர் கட்டணம் | **1,417,449** | **595,031** | **138%** | கட்டி ஐய்ஸ் உற்பத்தி அதிகரித்தமையுடன் நீர் வழங்கல் அதிகரித்தல். |
| வருமான வழி | | | | |
| ஊழியர் ஊதியம் மற்றும் கொடுப்பனவு | **18,791,481** | **22,017,107** | **15%** | நம்பிக்கை பொறுப்பில் கடமை மேற்கொண்ட இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் குறைத்தமை |
| மின் பயன்பாடு | **5,142,256** | **7,331,001** | **29%** | முன்னைய ஆண்டை விட மின் பயன்பாடு குறைந்தமை |
| பராமரிப்பு செலவு | **3,762,635** | **9,795,542** | **61%** | முன்னைய ஆண்டை விட பராமரிப்பு செலவு குறைந்தமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 மே 26 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பின் மோட்டார் வாகன பிரிவின் நிர்வாகத்திற்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் தனியார் நிறுவனத்துடன் 10 வருடங்களுக்காக 2011 ஆம் ஆண்டில் உடன்பட்ட ஒப்பந்தம் பிரகாரம் 40 சதவீதம் இலங்கை கடற்றொழில் | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பெறுகை குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளமையினால் நம்பிக்கை பொறுப்பு சபையினால் அங்கீகாரம் பெறப்படாமையும் காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்த காலம் வருகிற | நம்பிக்கை பொறுப்பிடம் காணப்படுகின்ற சொத்துக்களிலிருந்து நம்பிக்கை பொறுப்பிற்கு வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரகாரம் ஒப்பந்தம் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கும் எஞ்சிய 60 சதவீதம் நிறுவனத்திற்காக பெற்றுக்கொள்ளல் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரம் மற்றும் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்படாததுடன் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிகழ்காலத்திற்கு பொருத்தமான பிரகாரம் ஒப்பந்தம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | தினமொன்றில் நிறைவு செய்வதற்கு குறித்தமையினால் புதிய குத்தகை ஒப்பந்தம் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்படுவதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | திருத்தப்படல் வேண்டும். |
| **(ஆ)** | வர்த்தக வளாகம் அமைந்துள்ள 3.1776 ஆன ஹேக்டேயர் பரப்பிலான காணி மீளாய்வாண்டினுள் நம்பிக்கை பொறுப்பிற்கு கையகப்படுத்தப்படாதிருந்ததுடன், அவ்வாறு கையகப்படுத்தப்படாது அக் காணியில் மேற்கொள்ளப்பட்டிருந்த கட்டுமானங்களின் பெறுமதி ரூபா 1,688,741,540 ஆகும். | தொடர்புடைய கையகப்படுத்தல் நடவடிக்கைகள் நிறைவடையவில்லை. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் வர்த்தக வளாகம் அமைந்துள்ள காணி நம்பிக்கை பொறுப்பினால் கையகப்படுத்தப்படல் வேண்டும். |
| **(இ)** | மத்திய வர்த்தக வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மின்உற்பத்தி இயந்திரத்திற்கு தேவையான 4 பற்டரிகள் மீளாய்வாண்டில் காணாமல் போதல் தொடர்பான விசாரணை அறிக்கை பிரகாரமான ரூபா 20,000 ஆன நட்டத்தில் ரூபா 5,000 மட்டும் அறவிடப்பட்டிருந்தது. | 2020 கொவிட் நிலைமையினால் இந்த பணம் அறவிடப்படுவதற்கு முடியாதுள்ளதுடன் தற்போது பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணை அறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஈ)** | மத்திய வர்த்தக வளாகத்தினுள் 29 சீசீடீவீ கமராக்கள் செயற்படுத்தப்படுகின்ற போதிலும் அற்றின் ஊடாக ஏற்படுகின்ற முறைக்கேடுகளை அடையாளப்படுத்த முடியாமை கணக்காய்வினால் கேட்கப்பட்ட தகவல்கள் 2020 திசெம்பர் 31 திகதி வரையிலும் கிடைக்கப்பெறாமையினால் உறுதிப்படுத்தப்பட்டது. | 29 சீசீடீவீ கமராக்கள் வர்த்தக கட்டிடத்தில் உள்ளகத்திற்கு மற்றும் அவ் அருகான பிரதேசங்களுக்காக அமைக்கப்படுள்ளதெனவும், முன்மொழியப்பட்ட சீசீடீவீ கமரா அமைப்பில் சுற்றியுள்ள அனைத்து பிரதேசத்திற்காகவும் திட்டமிடுவதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அருகான அனைத்து பிரதேசத்திற்குமான பிரகாரம் முறையான சீசீடீவீ கமரா அமைப்பு பொருத்தி பராமரித்தல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லத குறைப்பயன்பாடுடைய ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 45,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு அமைப்பொன்று **(Accounting System)** நிலையான சொத்தாக கணக்கிடப்பட்டு 20 சதவீதம் வீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருப்பினும் அது பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லும் போது பிரச்சினைக்குரிய நிலையொன்று உருவாகியுள்ளதெனவும் கொவிட் இனால் கொடுப்பனவு செய்வதற்கு இயலாமையினாலும் நிறுவகத்தினால் கணக்கீட்டு அமைப்பு செயலற்றதாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான தரத்திலான கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 154 வியாபார நிலையங்களைக் கொண்ட மொத்த வியாபார வளாகத்தினை தவிர்த்து 128 வியாபார நிலையங்களைக் கொண்ட சில்லறை வியாபார வளாகமும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதில் 64 வியாபார நிலையங்கள் ரூபா 9,625,540 ஆன தொகை செலவு செய்து மொத்த வியாபார நிலையங்களாக மாற்றப்பட்டிருப்பினும் 2019 திசெம்பர் 31 வரையில் எந்தவொரு வியாபார நிலையங்களும் விற்பனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சில்லறை துறையின் மொத்த மற்றும் சில்லறை வியாபார நிலையங்கள் பல குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன், மாதாந்த குத்தகை பணம் தொடர்ந்து செலுத்தாத சந்தர்ப்பத்தில் வியாபார நிலையம் வைப்பு பணம் நம்பிக்கை பொறுப்பினால் கையகப்படுத்தப்பட்டு வேறு தரப்பினருக்கு மீண்டும் குத்தகைக்கு கொடுக்கப்படுகின்றதென தெரிவிக்கப்பட்டிருந்தது. | வியாபார நிலையங்கள் விற்பனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு சில்லறை மீன் விற்பனை மேம்படுத்துவதற்கு தந்திரோபாயங்களை பயன்படுத்த வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 3 குளிர்சாதனங்கள் மற்றும் பழங்கள் ஐஸ் இயந்திரம் மேம்படுத்தப்பட்டு பேணிச்செல்லல் மற்றும் புதிய ஐஸ் கட்டி இயந்திரமொன்று நிர்மாணிக்கப்பட்டு பேணிச் செல்லல் தொடர்பான ஒப்பந்தமொன்று வழங்கும் போது 2006 அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.3, 2.4, 2.5, 2.6, 4.2.1(அ), 4.2.2(அ), 4.3 மற்றும் 5.4.8 (அ) | குளிர்சாதனம் மற்றும் பழங்கள் ஐஸ் இயந்திரம் மேம்படுத்தப்பட்டு பேணிச் செல்லல் முதன்மையாகக் கொண்டு விலைமனு அழைக்கப்பட்டுள்ளதுடன் புதிய ஐஸ் கட்டிகள் இயந்திரத்திற்காக பெற்றுக் | நம்பிக்கை பொறுப்பிற்கு பொருளாதார நலன் பெற்றுக் கொள்வதற்காக 2006 அரச பெறுகை வழிக்காட்டி |

| | | | |
|---|---|---|---|
| | போன்ற வழிக்காட்ல்களை பின்பற்றியிருக்கவில்லை. | கொடுப்பதற்கு இணங்கிய காணி நிருணயமாகாத காரணத்தினால் ஒப்பந்தம் பேணிச் செல்வதற்கு முடியாதுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | கோவையின் வழிக்காட்டிகைள பின்பற்றப்பட வேண்டும். |
| **(ஆ)** | 2006 அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 8.9.1 வழிக்காட்டியின் பிரகாரம் 2019 சனவரி 31 ஆம் திகதி ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட வேண்டியிருந்த போதிலும், 2019 நவம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்ததுடன் விலைமனு பத்திரத்தின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கு உடன்பட்ட பின் ஒரு வாரத்தினுள் 3 மாத குத்தகை தொகையான ரூபா 900,000 ஆன முதன்மை வைப்பொன்று ஒரே தடவையில் பணமாக பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 பெப்ரவரி தொடக்கம் 2019 திசெம்பர் வரையான 11 மாதங்களுக்குள் பெற வேண்டிய ரூபா 5,980,000 ஆன தொகையில் 2019 திசெம்பர் 31 இற்கு நிலுவையாக காணப்பட்ட தொகையில் ரூபா 5,430,000 மற்றும் விலைமனு பத்திரத்தின் விதிமுறை பிரகாரம் வாடகை செலுத்தல் தாமதமாகல் தொடர்பாக கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்வது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படவில்லை. | வெவ்வேறு காரணங்களினால் தங்களால் இணங்கப்பட்ட ஒப்பந்த கட்டணம் நம்பிக்கை பொறுப்பிற்கு செலுத்துவதற்கு இயலாதொன விலை மனுதாரர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் மனுதாரர்களின் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு முடியாதுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2006 அரச பெறுகை வழிககாட்டி கோவையின் வழிக்காட்டிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலுவை வாடகைக்காகன தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு அல்லது குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(இ)** | மீளாய்வாண்டிற்காக பாதுகாப்பு சேவைக் கட்டணம் ரூபா 8 மில்லியனிற்கு மேற்பட்டதுடன் அச் சேவையை பெற்றுக் கொள்வதற்காக தேசிய போட்டி விலைமனு அழைத்தல் பெறுகை நடைமுறையை பின்பற்றாமல் 2019 ஆகஸ்ட் மாதம் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்களின் வருகை குறிப்புடன் பற்றுச்சீட்டுகள் தயாரிக்கப்படாமல் 2019 ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரை 5 மாத காலப்பகுதிக்காக ரூபா 3,737,700 செலுத்தப்பட்டிருந்தது. | கடற்றொழில் கூட்டுத்தாபனம் பாதுகாப்பு சேவையிலிருந்து விலகியவுடன் பொதுமக்கள் காணப்படும் இடங்களில் கடினமான பாதுகாப்பு பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பட்டமையினால் பெறுகை நடைமுறைக்காக போதுமான காலமொன்று காணப்படவில்லையென தெரிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிக்காட்டியை பின்பற்றி ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகை பெறுநர்களினால் குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டு நம்பிக்கை பொறுப்பிற்கு வியாபார நிலையங்கள் ஒப்புக் கொடாது வேறு தரப்பினருக்கு பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் நம்பிக்கை பொறுப்பு முறையான நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணத்தினால் 2006 அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 1.2.1(அ), (ஆ) மற்றும் (இ) ஆகிய வழிக்காட்டல்களிலிருந்து விலகியமை அவதானிக்கப்பட்டது. | நம்பிக்கை பொறுப்பின் வியாபார நிலையங்கள் வேறு தரப்பினருக்கு அளித்தல் முழுமையாக தவிர்ப்பதற்கு நம்பிக்கை பொறுப்பினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | 2006 அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை வருமான மீதி ரூபா 70,111,503 ஆனதுடன் அம் மீதியினுள் 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் காணப்பட்ட நிலுவை குத்தகை மீதி ரூபா 48,412,711 ஆக காணப்பட்டது. | மாதாந்த குத்தகை வாடகை அடுத்த மாத இறுதிக்கு முதல் செலுத்த முடியுமான வண்ணம் திருத்தப்பட்டுள்ளதெனவும் வாடகை விடப்படும் சந்தர்ப்பங்களில் ஞாபகமூட்டல் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து நிலுவை பணம் மற்றும் தண்டப் பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பணிநிலையினர் அங்கீகரிக்கப்பட்டு 05 வருடங்கள் ஆன போதிலும் நம்பிக்கை பொறுப்பின் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்காக 2019 திசெம்பர் 31 திகதி வரையிலும் இணைத்தல் நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டு இணைத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடற்றொழில் அமைச்சின் கீழ் ஆளுகை செய்யப்படும் நிறுவகமானதினால் மிகவும் நிதி நலனாக முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்தின் கீழ் இரு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளரென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நம்பிக்கை பொறுப்பு முறையான விதத்தில் பேணிச் செல்லப்படுவதற்கு தேவையான வெற்றிடமான பதவிகளுக்காக இணைத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய PF/423 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04.3 பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு நிறைவடைந்து 2 மாதங்களுக்குள் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் 2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிந்து 10 மாதங்களின் பின்னர் 2021 சனவரி 18 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றினால் குறித்த திகதிக்கு முன்வைப்பதற்கு முடியாது போனதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் குறித்த திகதியில் முன்வைக்கப்படாததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படல் வேண்டும். |

### 4.2 பெறுகை திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கபட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்படாத வருடாந்த செலவு ரூபா 22.8 மில்லியன் ஆன சுத்திகரித்தல் சேவை, வருடாந்த செலவு ரூபா 8.6 மில்லியன் ஆன பாதுகாப்பு சேவைச் செலவு மற்றும் ரூபா 904,000 ஆன முச்சக்கர வண்டி கொள்வனவு போன்ற செயற்பாடுகள் பெறுகை திட்டமொன்று இல்லாது நிறைவேற்றப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 133 பிரகாரம் நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிட்டுள்ள பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் உள்ளக கணக்காய்வு | பதில் கிடைக்கப்பெறவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் முகாமைத்து நம்பிக்கை பொறுப்பின் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று |

| | | |
|---|---|---|
| பிரிவு அமைத்து அமைப்புக்கள் மற்றும் கட்டுப்பாடு வலுப்படுத்தப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அமைத்து அமைப்புக்கள் மற்றும் கட்டுப்பாடு வலுப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.4 பாதீட்டுக் பதிவேட்டு கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய **PF/423** இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 (அ) பந்தியின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பாதீட்டு பதிவேடு அதற்கு முன் வருடத்தின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் அதற்கு முரணாக நம்பிக்கை பொறுப்பு சபை மட்டும் அங்கீகரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு பதிவேடு 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |

**4.5 சுற்றாடல் ரீதியான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பேலியகொடை மத்திய மீன் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு தொடர்புடையதாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் ரீதியான பிரச்சனைகள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப்படிவம் 2014 மார்ச் 18 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருப்பினும் அதற்காக 6 வருடங்கள் கடந்திருப்பினும் அவ் அதிகார சபை வழங்கியுள்ள ஆலோசனையின் பிரகாரம் சுத்தமற்ற நீர் சுத்தமாக்கப்பட்டு **(Treatment Plant)** விடுவிக்கும் பாதை அமைப்பு மற்றும் வடிகாலமைப்பிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்காமையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுதிப்பத்திரம் கிடைக்காதிருந்தது. | மத்திய சுற்றாடல் அதிகார சபை பெற்றுக் கொடுத்துள்ள ஆலோசனை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் தூய்மையற்ற நீர் சுத்திகரிப்பாக்கி மட்டும் நிர்மாணிக்வில்லையெனவும் நிர்மாணித்தி முடிந்தப்பின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள் ஆலோசனைகள் மிக விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |